# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

## அ.சா. 5 (LW 6)

| **பெயர்** | **திரு. பூபதிராஜ்** | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/க பெயர்** | பன்னீர்செல்வம் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **11.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 2, எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மணப்பாறையில் குடியிருந்து வருகிறேன். ஓட்டலில் வேலை பார்க்கிறேன். வழக்கில் இறந்த பன்னீர் செல்வம் எனது அப்பா ஆவார். கடந்த 06.05.2021 அன்று எனது பாட்டி எரியோடு புதூரில் எனது பாட்டி இறந்து விட்டதால் நான் எனது அம்மா, அப்பா மூன்று பேர்களும் சென்றோம். கேதகாரியம் முடிந்து அடக்கம் செய்யப்பட்டது. உணவிற்காக எனது அப்பாவும், மாமாவும் உணவு வாங்குவதற்காக சென்றார்கள். எனது மாமா பாலு தொலைபேசி மூலமாக என்னை தொடர்பு கொண்டு புங்கம்பாடி அருகே உள்ள ஓட்டலில் என் அப்பாவை அடித்து விட்டதாக சொன்னார்கள். உடனே நானும், தங்கராஜ், தண்டபாணி, ராஜ்குமார் ஆகியோர்கள் சம்பவ இடத்திற்கு சென்றோம்.நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது என் அப்பாவுக்கு தலையின் பின்புறம் காயமும், மூக்கிலும், வாயிலும் இரத்தகசிவு இருந்தது. என் அண்ணன் ராஜ்குமார் என் மாப்பிள்ளை வீரமணிக்கு போன் செய்தார். அதன் பின்னிட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் இரத்தக்கசிவு அதிகமாக இருந்ததால் மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். எனது மாமா ரமேசுக்கு கை மற்றும் காலில் சம்பவத்தன்று அடிபட்டது. அவர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். சம்பவ இடத்திலிருந்து 2 கிமீ அளவில் நாங்கள் குளித்துக் கொண்டிருந்த போது எனது அப்பா சாப்பாடு வாங்க சென்ற போது எதிரிகளுடன் ஏற்பட்ட பிரச்சனையில் எனது அப்பா காயம்பட்டதாக கேள்விப்பட்டு நான் போய் பார்த்தேன். நான் பார்த்த போது கடையில் பொருட்கள் சேதமாகியிருந்தது. அந்த சமயத்தில் ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்தார்கள். அவர்கள் ஓடிவிட்டனர். நான் பின்னிட்டு எனது அப்பாவை மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். சம்பவ இடத்தில் ஓட்டல் கடைக்காரர்கள் 3 பெண்கள் இருந்தார்கள். அவர்கள் வெளியில்

இருந்தார்கள். நாங்கள் சென்றவுடன் உள்ளே சென்று விட்டார்கள். என் பெயர்பூபதி ராஜ், பூபதி என்று என்னை அழைப்பார்கள். மருத்துவமனையில் வந்து போலிசார் என்னை விசாரித்தார்கள். மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி எனது அப்பா இறந்து விட்டார். நான் என் அப்பாவுடன் இருந்தேன். என் அப்பா உடுத்தியிருந்த ஆடைகளை இரத்தக்கரை படிந்த ஆடைகளை போலிசாரிடம் கொடுத்தேன்.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலிசார் என்னை விசாரித்த போது சம்பவ இடத்திற்கு நான் சென்ற போது எதிரிகளை நான் பார்த்ததாகவோ, எதிரிகள் அங்கு இருந்ததாகவோ , என்னை பார்த்த போது ஓடிவிட்டதாகவோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் போன போது ஓட்டலில் இருந்த 3 பெண்களும் என்னை பார்த்தவுடன் உள்ளே சென்று விட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போய் பார்த்த போது எனது மாமா ரமேசின் மடியில் என் அப்பாவை வைத்திருந்தார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல என் மாமா ரமேசின் ஆடைகளில் இரத்தக்கரை இருந்ததா என்றால் சரிதான். என் அப்பாவுக்கு 15 நாட்கள் கழித்து காரியம் நடந்தது. அதன்பின்பு தான் எதிரிகளின் பெயர் தெரிய வந்தது. சம்பவத்தை நான் கேள்விப்பட் தகவல்தான். சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.11 19:03:58 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.